# யாழ் நூலக எரிப்பு

## நீண்ட கால நித்திரையிலிருந்து துயிலெழுந்து மன்னிப்பு நாடகமாகும் அமைச்சர் ரணவக்க

வ. திருநாவுக்கரசு

அண்மையில் ஜாதிக்க ஹெல உறுமயே (JHU) தலைவரும் மின் சக்தி அமைச்சருமாகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்த போது அரும் பொக்கிஷமாகிய யாழ்ப்பாண நூலகம் தீயிட்டு அழிக்கப்பட்டதற்காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக அறிக்கையினை ஊடகங்கள் வாயிலாக அறிய வந்த போது அது சற்று விநோதமாயிருந்தது. உண்மையில் வெறுமனே பாசாங்குத்தனமான அச்செயலானது, பொதுவாக தமிழ் மக்கள் கண்ணில் மண்ணைத் தூவி பெருந்தன்மையான தொரு மனப்பான்மையைக் காட்டுவதாகக் கற்பித்த ஏமாற்று வித்தையாகும். இன்னும் சொன்னால், 94,000 நூல்களைத்தன்னகத்தே கொண்டிருந்த அந்த நூலகமானது ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டதன் காரணமாக தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) அரசாங்கத்திற்குச் சாதகமான மிக விநோதமான பிரசார யுத்தியாகவே அமைச்சர் ரணவக்க மன்னிப்புக் கேட்டதைக் கொள்ள வேண்டியுள்ளது.

நிற்க, யாரும் மறைத்து விடமுடியாத விடயம் யாதெனில், குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்த வரை ஐ.தே.கவுக்கும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் (ஸ்ரீல. சு.க) இடையில் எதுவித வித்தியாசமும் கிடையாது என்பதாகும். உண்மையில் ஆங்கிலத்தில் ருவீடல்டம் மற்றும் ருவீல்டி (Tweedledum and Tweedledee) என்று கூறப்படுவதற்கு ஒப்பானதாகவே அவ் இருகட்சிகளும் உள்ளன. தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு காணும் விடயத்தில் அவ் இரு கட்சிகளுமே விடாப்பிடியான பேரினவாதப் போக்கினைக் கொண்டிருந்தது படியாலேயே அக்கட்சிகளை அவ்வாறு இனங்காண வேண்டிய நிலைப்பாடுள்ளது.

உண்மையில் யாழ் நூலகம் அழிக்கப்பட்டது சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கங்களால் தமிழ் மக்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒரே ஒரு நாசகார நடவடிக்கை என்பதற்கில்லை மாறாக, நாடு அந்நிய ஆட்சியிலிருந்து சுதந்திரமடைந்த பின்பு மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களாலும் முடுக்கி விடப்பட்ட பல்வேறு மிலேச்சத்தனமான தாக்குதல்களில் ஒன்று மட்டுமே. சுதந்திரமடைந்த கையோடு பெருந்தோட்டத்துறை தமிழ் தொழிலாளர்களின் குடியுரிமை மற்றும் வாக்குரிமை முதலாவதாகப் பதவியேற்ற ஐ.தே.க தலைமையிலான அரசாங்கத்தால் பறித்தெடுக்கப்பட்டது. அடுத்து வந்ததாகிய பாகுபாடான சீரளிவு நடவடிக்கை தான் 1956ல் ஸ்ரீல சு.க தலைமையிலான அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டதாகிய தனிச்சிங்கள சட்டமாகும். தமிழ் மக்கள் தமக்குரிய அரசியல் - பொருளாதார உரிமைகளோடு சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ வழி சமைப்பதற்கான போராட்டங்கள் படுதோல்விகளைத் தழுவிய நிலையிலேயே 1976ல் தனி நாட்டுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதாவது 1956ல் நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்கள சட்டம் தான் 1976ல் தமிழ் மக்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டதாகிய தனிநாட்டுக் கோரிக்கைக்கு வித்திட்டது. எனினும் தமிழ் மக்கள் மேற்கொண்ட சாத்வீகமான போராட்டங்கள் அரசாங்கங்கள் அதிகளவிலான பயங்கரவாத தாக்குதல்களையே மேற்கொண்டு வந்தன. அந்த வரிசையில நடத்தப்பட்டது தான் காட்டுமிராண்டித்தனமான யாழ் நூலக அழிப்பு ஆகும். அத்தோடு நின்றுவிடாமல் யாழ்ப்பாணத்தில் 13 சிங்கள சிப்பாய்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைக் காரணம் கற்பித்து தமிழருக்கெதிராக 1983 ஜுலையில் முன்னெப்போது மில்லாதளவு கோரத்தாண்டவம் அன்றைய ஐ.தே.க ஆட்சியாளரால் நடத்தப்பட்டதுடன் கூடிய ஒட்டு மொத்தமான விளைவாகவே தமிழர் தரப்பிலான ஆயுதப் போராட்டம் உத்வேகம் பெற்றதோடு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் எழுந்தது. பௌத்த துறவிகள் எனப்படுவோர் குழுவொன்றின் தலைமையில் சில வருடங்களுக்கு முன்பு தோற்றம் பெற்றதாகிய ஜாதிக்க ஹெல உறுமய (JHU) தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியானதொரு நிலையான அரசியல் காணப்பட வேண்டிய விடயத்தில் அழுங்குப்பிடியாக எதிர் நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது. அதாவது அனைத்து இனமக்களையும் உள்வாங்கி அதிகாரப்பகிர்வுக்கான பொறிமுறையினை அவர்கள் எதிர்த்து நிற்பதானது கௌதம புத்தர் தோற்றுவித 8 அம்சபரிசுத்தமான மார்க்கத்திற்கு முற்றிலும் . எதிர்மறையானதாகும்.

எனவே தான் அமைச்சர் ரணவக்க நீண்ட கால நித்திரையின் பின் துயிலெழுந்தவர் போல் யாழப்பாண சமூகத்திடம் இறங்கி வந்து மன்னிப்புக் கேட்பது போல் நாடகமாடிக்கொள்வது ஒரு பிரமாண்டமான ஏமாற்றுவித்தை என்பதை அடித்துக் கூற முடியும்.

# உலகமயமாக்கலுக்குஎதிராக தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு இவையே இன்றைய போராட்ட வடிவமாகும்

கடந்த 14.06.2010 அன்று ஓன்வின் தொழிலாளர் பாடகலை அமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்கட்சியின் வீழ்ச்சி என்னும் தலைப்பிலான கருந்தரங்கு கொம்பனி தெரு, கியூவீதியில் அமைந்திருக்கு அண்ணாமலை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருதரங்கில் பிரதான உரை ஆற்றிய கலாநிதி விக்கிரமபாகு தெரிவித்தகருத்துக்கள். இக்கருத்தரங்கிற்கு வ.திருநாவுக்கரசு தலைமை வகித்தார்.

இன்று எதிர்கட்சிகள் யாவும் பலவீன நிலையில் உள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி, முஸ்லீம் காங்கிரஸ் எனப்படுகின்ற சகலகட்சிகளும் வீழ்ச்சி நிலையிலேயே உள்ளன. இதே நேரம் அரசாங்கம் சர்வாதிகார போக்கில் ஆட்சியை நடத்துகின்றது ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கும், 17வது திருத்த அரசியலமைப்பை பிரிவை நீக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு அவசரகாலச்சட்டம், பயங்கரவாததடைச்சட்டம் என்பவை தொடர்ந்தும் அமுலில் உள்ளன.

சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சர்வதெச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் உள்வாங்கி உள்ளது இதனால் மக்களின் சமூகநலன் தொடர்பான ஏற்பாடுகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

மறுபக்கம் இந்திய அரசும் சீபா போன்ற ஒப்பந்தங்கள் ஊடாக தமது நலன்களை திணிப்பதற்கு பல்வேறு விதங்களில் செயற்பட்டு வருகின்றன. எனவே அரசாங்கத்தின் சர்வதிகாரத்தை நோக்கிய வளர்ச்சி ஒருபக்கம் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து நாட்டை அழிவு பாதைக்கு இட்டுச் செல்லும் செயற்பாடுகள் மற்றொரு பக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உள்நாட்டு விவசாயம், கடற்றொழில் என்பன மோசமான கட்டடத்துக்கு சென்றுள்ளன. சமுர்த்தி நிவாரணம் மேலும் குறைக்கப்பட்டு உள்ளது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி என்ன கொள்கைக்காக போராடப் போகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை மகிந்த அரசாங்கம் நேர்த்தியான முறையில் முன்னெடுக்கிறது அதாவது உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு மகிந்த அரசாங்கம் பச்சை கொடி காட்டியுள்ளது. எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றும் செய்ய முடியாத நிலையில் உள்ளது. ஜே.வி.பி யின் தலைவர் சரத்பொன்சேகா என்ன கொள்கையை முன்வைக்கிறார். அவரும் ஊழல் அற்ற ஆட்சி சிறந்த நிர்வாகம். என்று கூறுகிறாரே தவிர மாற்றுகொள்கை ஒன்றை முன்வைக்கவில்லை. எனவே இன்று முக்கியமான பிரச்சனை கொள்கை ரீதியானதாகும்.

முதலாவதாக உலகமய முதலாளித்துவத்திற்கு எதிரான நிலை, இரண்டாவது தேசிய இனப்பிரச்சனைக்கு உரிய தீர்வு இவையே இன்று உள்ள முக்கிய பிரச்சினைகளாகும். இந்த இரண்டு பிரச்சினைகளையும் முன் வைத்தே ஒரு போராட்டத்தை தொடங்க முடியும் உலகமய முதலாளித்துவத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி போராட முன்வராது, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வில் ஜே.வி.பி உடன்பாட்டுக்கு வராது. இத்தகைய சூழ்நிலையே இன்று இந்த நாட்டில் எதிர்கட்சி பலவீன நிலைக்கு முக்கிய காரணிகளாக உள்ளன.

இந்த இரண்டு கோரிக்கைகளும் முன்னெடுக்கப்படாமல் ஒரு போராட்ட அலையை இந்த நாட்டில் தோற்றுவிக்கமுடியாது. இன்று இனப்பிரச்சனைக்கு தீர்வை இந்தியா வலியுறுத்துகிறது. சர்வதேச அழுத்தமும் உள்ளது மகிந்த இனப்பிரச்சினைக்கு தீர்வை வைக்கமுடியாது! ஏனென்றால் இனவாத அமைப்புக்கள் அதற்கு ஒருபோதும் சம்மதிக்காது. மறுபக்கத்தில் ரணில் விக்கிரமசிங்காவிற்கு எதிராக சுஜித்பிரேமதாச முதன்நிலைப்படுத்தும் நிலை காணப்படுகிறது. இதற்கு ஜே.வி.பியும் ஆதரவாக உள்ளது. சுஜித் பிரேமதாச மகிந்தவை அடியொற்றிய கொள்கைகளை உடைவராக உள்ளார். இன்றைய ஆட்சியாளர் சர்வாதிகார அரசியல் யாப்பை நீக்குவோம் என்றே பதவிக்கு வந்தனர். ஆனால் ஜனாதிபதிக்கு அதிகாரம் மேலும் வேண்டும் என இப்போது கதையளக்கின்றார்கள்.

எனவே அடிப்படை மாற்றத்தக்க போராட எவரும் முன் வருகின்றார்கள் இல்லை இதுவே இன்று எதிர்க்கட்சியின் பலவீனநிலையாக காணப்படுகிறது. உதிரி பிரச்சினைக்கு போராட சகலரும் தயாராக இருக்கின்றனர் உதிரி பிரச்சனைக்கு அணிதிரள்வதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது. இன்று இந்திய அதிகார வர்க்கமும், ஏகாதிபத்திய சக்திகளும், தமிழர்களுக்கு

4ம் பக்கம்.......

1ம் பக்க தொடர்ச்சி......

### தமிழ் மக்களின்.......

பிரமாண்டமான இராணுவ முகாம் முயற்சிகளை நிறுத்த, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை தடுப்பதற்காக அமையவேண்டும். மேற்படி நலன்களுக்கான ஐக்கியமே இன்று எமக்கு தேவைப்படுகின்றது. இலங்கை அரசின் நலன்களை நிலைநிறுத்த சிலரும் இந்திய அரசின் நலன்களுக்காக வேறு சிலரும் இன்று செயற்பட்டு வருகின்றனர். இந்த பொறிக்குள் தமிழ் மக்கள் ஒருபோதும் சிக்கக் கூடாது.

இன்று சிங்களப் பேரினவாதம், இந்திய அதிகாரவர்க்கம், உலக ஏகாதிபத்திய சக்திகள் தத்தமது நலன்களுக்காக திரைமறைவில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன எனவே இந்த சக்திகளின் செல்வாக்குக்குள் நாம் செல்லாது தமிழ் மக்களின் உண்மையான விடுதலைக்காக உழைப்பதற்கு தயாராகவேண்டும்.